

திருச்சியில் மூளைச்சாவு அடைந்து, உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்ட பாதிரியார் பிரான்சிஸ் சேவியர் அவர்களின் உடலுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிக்கோ இருதயராஜ், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.

### வெம்பக்கோட்டை அகழாய்வில்

## சுடுமண் குடுவை கண்டெடுப்பு!

விருதுநகர்,செப்.29-

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையில் நடைபெற்று வரும் 2ம் கட்ட அகழ்வாராய்ச்சியில் தங்க அணிகலன், தங்க தாலி, ஆண் உருவ சுடுமண் பொம்மை, யானை தந்த பகடைக்காய், சுடுமண் அகல்விளக்கு, சுடுமண் அணிகலன், சங்கு, துதியாளி பொறிக்கப்பட்ட வேணாட்டு சிற்றரசு கால செப்பு நாணயம் உள்ளிட்ட எண்ணற்ற தொன்மையான தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில். தற்போது சுடு மண் குடுவை கண்டெடுக்கப்பட்டுள்ளது. பூக்கள் போன்ற அலங்காரம் செய்யப்பட்டுள்ள குடுவையில் தண்ணீர் சேமித்து வைக்க தொன்மையான மனிதர்கள் பயன்படுத்தி இருக்கலாம் என தொல்லியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.



எங்கள் தலைவர் எங்கள் கட்சி எங்கள் கொடி எங்கள் கொள்கை என தலைப்பில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் திருவள்ளூர் நகரத்தில் கழக நிர்வாகிகள் இல்லந்தோறும் கழக கொடியேற்றும் விழா நடைபெற்றது. இதில் நகரக் கழகச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் ஏற்பாட்டில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன்.எம்எல்ஏ ஆகியோர் கழகக் இருவண்ணக் கொடியினை ஏற்றினார்கள். அருகில் கே.திராவிடபக்தன், உதயமலர் பாண்டியன், ப.சிட்டிபாபு, எஸ்.மகாலிங்கம், கே.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், தி.ஆ.கமலக்கண்ணன், டி.எம்.ரவி, ராஜேஸ்வரி கைலாசம், எஸ்.டி.பி.சம்பத் ராஜா, இ.குப்பன், டி.என்.ஆர்.சீனிவாசன், டி.சிவக்குமார், ம.கிரண், டி.கே.பாபு, ம.புவனேஸ்குமார், ஆர்.திலீபன், வேலாயுதம், மதுசூதனம் கு.பிரபாகரன், கோபால், அய்யூப் அலி, வீனஸ், ராயல்பாஸ்கரன், டொனால்டோ, மேஸ்திரி விஜயகுமார், கோவி.மனோகரன், நரேஷ், கோடீஸ்வரன், பஸ் ஸ்டாண்ட் ஜெ.சேகர், ஆ.பவளவண்ணன், ஜி.பாண்டியன், பாலகிருஷ்ணன், ராஜி, அஸ்லாம், ஜி.எம்.கிஷோர், தனலட்சுமி, காஞ்சிபாடி சரவணன், தொமுச பாஸ்கர், துரைராஜ், ஜே.சி.பி.கேசவன், உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

### ‘பசுமைப் புரட்சியின் தந்தை’ வேளாண் அறிவியலாளர்

# எம்.எஸ்.சுவாமிநாதன் மறைவு - அறிவியல் துறைக்கும் தமிழ்நாட்டுக்கும் பேரிழப்பு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 29-

வேளாண் அறிவியலாளர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தியில், “பசுமைப் புரட்சியின் தந்தை - வேளாண் துறை விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் மறைவுக்கு அறிவியல் துறைக்கும், தமிழ்நாட்டுக்கும் ஈடுசெய்ய இயலாத பேரிழப்பு!” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

பசிப்பிணி ஒழிப்பு உணவுப் பாதுகாப்பு என்ற இரு குறிக்கோள்களுக்காகக் கடந்த முக்கால் நூற்றாண்டு காலம் அரும்பணி ஆற்றி வந்த தலைசிறந்த வேளாண் அறிவியலாளர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் மறைந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்துகிறேன்.

நீடித்து நிலைத்த உணவுப் பாதுகாப்புக்காக ஆற்றிய பங்களிப்புகளுக்காக பசுமைப் புரட்சியின் தந்தை எனப் பரவலாகப் போற்றப்படும் சுவாமிநாதன் அவர்கள் உலக அரிசி ஆராய்ச்சி நிறுவனம் (IRRI), இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ICAR) முதலிய பல்வேறு பன்னாட்டு மற்றும் அரசு ஆராய்ச்சி நிறுவனங்களின் உயர் பொறுப்புகளில் பணியாற்றிய சிறப்புக்குரியவர் ஆவார். ஒன்றிய வேளாண்



அமைச்சகத்தின் முதன்மைச் செயலாளராக இருந்த அவர் பின்னர் மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

சமூகத் தலைமைக்கான ராமன் மகசேசே விருது, பத்ம ஸ்ரீ, பத்ம பூசண், பத்ம விபூசண் உள்ளிட்ட பல உயரிய விருதுகளை வென்ற சுவாமிநாதன் அவர்கள், இருபதாம் நூற்றாண்டில் மிகப் பெரும் தாக்கம் செலுத்திய ஆசிய ஆளுமைகள் என உலகப் புகழ் பெற்ற “டைம்” இதழ் வெளியிட்ட பட்டியலில் மகாத்மா காந்தி, இரவீந்திரநாத் தாகூர் ஆகியோருடன் இடம்பெற்ற இந்தியர் ஆவார்.

நாடு போற்றும் விஞ்ஞானியாக சுற்றுச்சூழல் வேளாண்மைத்துறையில் அளப்பரிய பங்காற்றிய சுவாமிநாதன் அவர்கள் 1989-91, 1996-2000 ஆகிய ஆண்டுகளில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது மாநிலத் திட்டக் குழுவிலும் இடம்பெற்று சீரிய ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

தலைவர் கலைஞருடனும், என்னுடனும் எப்போதும் நல்ல நட்பைப் பேணி வந்தார். 1989ஆம் ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்களிடத்தில் சுவாமிநாதன் அவர்கள் கோரிக்கை வைத்ததும், தரமணியில் அவர் நிலம் வழங்கிய இடத்தில்தான் கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாக, ‘எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்’ செயல்பட்டு வருகிறது.

கடந்த 2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அந்நிறுவனத்தின் 32ஆவது ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றி, 96 ஆவது பிறந்தநாள் காணவிருக்கும் சுவாமிநாதன் அவர்கள் நூறாண்டு வாழ்க என வாழ்த்தியது தற்போது என் நெஞ்சில் நிழலாடுகிறது.

அவரது இழப்பு அறிவியல் துறைக்கும் தமிழ்நாட்டுக்கும் ஈடு செய்ய இயலாத பேரிழப்பாகும்.

மிகப்பெரும் ஆளுமையை இழந்து தவிக்கும் அறிவியல் உலகினருக்கும் அவரது குடும்பத்தார்க்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா: இரா.பொன்னுராம் தலைமையில்

## தமிழ்நாடு கூட்டுறவு நியாய விலைக் கடை தொ.மு.ச. கொடியேற்றி பெயர் பலகை திறப்பு!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. - மு.சண்முகம் எம்.பி. - கி.நடராசன் பங்கேற்பு!

சென்னை, செப். 29 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு கூட்டுறவு நியாய விலைக் கடை தொழிலாளர் முன்னேற்ற சங்கம் தொழிற்சங்க பெயர் பலகை திறந்து வைத்து கொடியேற்றுதல் நிகழ்ச்சி இன்று (30.9.2023 - சனிக்கிழமை) காலை 11 மணிக்கு நெ.293, ஜி.என்.டி. சாலை, செங்குன்றம், சென்னை 52.-ல் நடைபெறுகிறது.

இதில் செல்வகுமார், டி.சண்முகம், இ.உமாபதி ஆகியோர் வரவேற்கின்றனர். பொது செயலாளர் கூட்டுறவு விற்பனை சங்க தொ.மு.ச. சி.தணிகாசலம் வரவேற்கிறார்.

தொ.மு.ச பேரவை செயலாளர் இரா.பொன்னுராம் தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி., தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை பொருளாளர் கி.நடராசன் ஆகியோர் கொடியேற்றி பெயர் பலகை திறந்து வைக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் பெ.சரவணன், ஜி.ராஜேந்திரன், கு.தமிழரசி குமார், நாகூர் கனி, விப்ரநாராயணன், இதயபிரபு, பொது செயலாளர் பண்டக சாலை ஆர்.மகேந்திரன், ஜெ.ஜெய்மதன், இரா.ஏ.பாபு, ஜி.அருள்தேவநேசன், ஆர்.சீனிவாசன், கே.கபிலன், எஸ்.முனீஸ்வரி, சுகுமார், என்.சந்திரசேகர், மாவட்ட நிர்வாகிகள்: ஏ.செல்ல மாரியப்பன், மு.ஜெயசந்திரன், என்.மாறன், ஜி.இளவரசு, ஆர்.புகழேந்திரன், எஸ்.சுந்தர்ராஜன், எஸ்.கெஜலட்சுமி, ஆர்.காந்திமதி, என்.லட்சுமணன், டி.கருணாகரன், எம்.ஏ.ஆர்.சீனிவாசன், பி.பக்தவச்சலூ , நிகழ்ச்சியில் பேரூர் கழக நிர்வாகிகள், மன்ற உறுப்பினர்கள் கழக உடன் பிறப்புகள் மற்றும் அனைத்து தொழிலாளர் தோழர்களும் கலந்து கொள்கின்றனர்.

விற்பனை சங்க தொ.மு.ச ஒருங்கிணைப்பாளர் கே.நீதிராஜன் நன்றி கூறுகிறார்.

### குன்னம் சி. இராஜேந்திரன் தலைமையில்

## பெரம்பலூர் மாவட்ட கலை இலக்கிய பேரவை ஆலோசனைக் கூட்டம்!

### எம். பிரபாகரன் எம்.எல்.ஏ. - முன்னணியினர் பங்கேற்பு!

பெரம்பலூர்,செப்,29

பெரம்பலூர் மாவட்ட கலை இலக்கிய பேரவை ஆலோசனைக் கூட்டம், மாவட்ட கழக அலுவலகத்தில்,

மாவட்ட செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், மாவட்ட கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் கே.எம்.ஏ.சுந்தரராசு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவசங்கர், கலை இலக்கிய பேரவை மாவட்ட அமைப்பாளர் முத்தரசன், கலை இலக்கிய பேரவை மாவட்ட துணை தலைவர் ரமேஷ்,

கலை இலக்கிய பேரவை மாவட்ட துணை அமைப்பாளர்கள் ந.முத்து செல்வம்,பூபதி, சின்னதுரை, தென்றல் ரவி, கணேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

வருகிற 22.10 .2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9 மணி அளவில் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கவிதைகள், திரைப்பட வசனங்கள் ஒப்புவித்தல் போட்டி நடத்துவது எனவும், தலைவர் கலைஞர் அவர்களின் சிறந்த வசனங்கள் சிறந்த திரைப்படங்களை

மாவட்டம் முழுவதும் ஒளிபரப்புவது எனவும்,

வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ், பரிசுத்தொகை வழங்குவது எனவும்,

வெற்றி பெறும் முதல் மூன்று மணவ,மாணவியர்களை மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்க செய்வது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### நிவேதா எம்.முருகன். எம்.எல்.ஏ., தலைமை! மயிலாடுதுறை மாவட்டம் -

## பூம்புகாரில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! மாபெரும் கவியரங்கம்!

### செ.இராமலிங்கம் எம்.பி., - எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., - குத்தாலம் பி.கல்யாணம் பங்கேற்பு!

நாகை. செப்.29

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி மற்றும் சீர்காழி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சர்hபில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் கவியரங்கம் மற்றும் பொதுக்கூட்டம் பூம்புகார் கொற்றவைபந்தலில் நடைபெறுகிறது. விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜுு.என்.ரவி, ஒன்றியக் குழு தலைவர் கமலஜோதிதேவேந்திரதன், சீர்காழி மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.ஜி.ஜே.பிரபாகரன், சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர் சுபாநெடுஞ்செழியன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் காளி.தேசேப்பன், மாவட்ட மீனவர் அணி துணை தலைவர் பி.மாரிமுத்து, ஊராட்சி மன்ற தலைவர் என்.சசிக்குமார், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் வேல்சாமி, மாவட்ட இலக்கிய அணி துணைத்தலைவர் மா.இராசாங்கம், மாவட்ட இலைக்கிய அணி துணை அமைப்பாளர்கள் என்.தங்கவேல், அங்குதன், நா.செ.இளமுருகு செல்வன், பு.இரவிச்சந்திரன், ஆர். உதயசங்கர், அரிகிருஷ்ணன், ஜெ.நடராஜன், மாணிக்கம், எஸ்.ஆனந்தன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.ஜுுபையர்அகமது, ஒன்றிய அவைத்தலைவர் எம்.என்.ஆர்.நெடுஞ்செழியன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் எஸ்.சுதாகர், க.ரவிச்சந்திரன், உதயராணி, ஒன்றிய பொருளாளர் மா.தமிழரசன், மாவட்ட பிரதிநிதிகள் எம்.ஆர்.கணேசன், வை.துரைராஜன், கோபி ஆகியோர் முன்னிலைவகித்தனர். மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் இரா.முருகப்பா வரவேற்றார். சீர்காழி கிழக்கு ஒன்றியச் செயலாளர் பஞ்சுகுமார் தொடக்க உரையாற்றினார். கவியரங்கத்தை கழக கொள்கை பரப்புச் செயலாளர், மாநிலங்களவைக்குழு தலைவர் திருச்சி சிவா தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். அதைத் தொடர்ந்து நடைபெறும் கவியரங்கத்திற்கு தமிழின் தவமகன் கலைஞர் என்ற தலைப்பில் கவிதைப்பித்தன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கத்தில் ஆண்டாள்பிரியதர்ஷினி, தஞ்சைஇனியன், வீ.ம.இளங்கோவன், கொற்கைமுத்து, மேட்டூர் வைரமணி ஆகியோர் பேசினார்கள். கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம், கவியரங்க விழாவில் சுற்றுசூழல் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், தலைமை அரசு கொறடா கோவி.செழியன் எம்.எல்.ஏ. சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர் செல்வம், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், ஏ.சி.என்.சிவபாலன், எம்.எம்.சித்திக், மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞான வேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்ல.சேதுரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், என்.இளையபெருமாள், ஞான.இமையநாதன், ப.முருகமணி, பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமிர்த.விஜயகுமார், மங்கை எம்.சங்கர், கு.வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா, மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், பேரூர் கழகச் செயலாளர்கள் முத்துராஜா, அண்ணாதுரை, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.சுவாமிநாதன், பி.கென்னடி, வின்செென்ட், அ.காந்த, சங்கரநாராயணன், பி.சிவதாஸ், ஜெ.கபிலன், அர்சத், எஸ்.வெற்றிவேல், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர் மற்றும் ஒன்றியக் குழு தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ஏ.தியாகராஜன் நன்றி கூறினார்.

## தி.மு.க. மகளிரணி, மகளிர் தொண்டரணி புதிய மாவட்ட நிர்வாகிகள் அறிமுக கூட்டம்!

### அணியின் செயலாளர்கள் ஹெலன் டேவிட்சன், நாமக்கல் இராணி அறிவிப்பு!

தி.மு.க மகளிரணி, மகளிர் தொண்டரணி புதிய மாவட்ட நிர்வாகிகள் அறிமுக கூட்டம் 07-10-2023 அன்று (சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் கழக துணை பொது செயலாளர் திருமிகு. கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெறுகிறது.

இக்கட்டத்தில் கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் & குடிநீர் வழங்கல்துறை அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரையாற்றுகிறார். பள்ளி கல்விதுறை அமைச்சர் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் மற்றும் தியாகராஜன் எம்.எல்.ஏ., திருச்சி (வடக்கு மாவட்ட கழக செயலாளர்,) திருச்சி மத்திய மாவட்ட கழக செயலாளர் வைரமணி, திருச்சி மாநகர மேயர், திருச்சி மேற்கு மாநகர செயலாளர் அன்பழகள், மு. மதிவாணன், மாநகர கழக செயலாளர் (கிழக்கு) மண்டலம் தலைவர் திருச்சி மாநகராட்சி அனைவரின் முன்னிலையில் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்து மாநில நிர்வாகிகள், மகளிரணி, மகளிர் தொண்டரணி, பிரச்சாரகுழு, வலைதளகுழு, ஆலோசனை குழு உறுப்பினர் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் முரசொலியில் அறிவித்த புதிய மாவட்ட நிர்வாகிகள், அனைவரும் கூட்டத்தில் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**ஹெலன் டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிரணி

**நாமக்கல் இராணி**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டரணி



ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வார்டு 41 அன்னை சத்யா நகரில் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணும் வண்ணம் புதிதாக அமையவிருக்கின்ற மாற்றுப் பாதையில் சாலை அமைக்கும் பணிக்காக அகற்றப்பட்ட 6 குடியிருப்புகளுக்கு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கீழ் புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான ஆணையை சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், நேதாஜி யு.கணேசன், பா.விமலா, இ.மணிமேகலை ஏழுமலை, ஏ.டி. மணி, இர.பொன் இளவரசன், இ.ரவிக்குமார், ஆர்.ஏ.எம்.சசிக்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### 110 ‘அ’ வட்ட துணைச் செயலாளர்

## மு.சா.பரத்குமார் தாயார் புவனேஸ்வரி மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, செப்.29-



சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி 110 ‘அ’ வட்ட துணைச் செயலாளர் மு.சா.பரத்குமார் மற்றும் ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதி 41-வது வட்ட துணைச் செயலாளர் மு.சா. அரித்குமார் ஆகியோரின் தாயாரும், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இலத்தூர் ஒன்றியம் மடையம்பாக்கம் தி.மு.க. முன்னாள் கிளைச் செயலாளர் மு.சாம்பசிவத்தின் மனைவியுமான சா.புவனேஸ்வரி அவர்கள் நேற்று 28.9.2023 இரவு 7 மணியளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தியறிந்து கழகத்தினர் அவரது உடலுக்கு மலர் மாலைகள் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது உடல் அவரது சொந்த ஊரான செய்யூர் வட்டம், மடையம்பாக்கம் கிராமத்தில் இன்று 29.9.2023 மாலை 3 மணியளவில் நல்லடக்கம் செய்யப் படுகிறது.



திருவொற்றியூரில் அரசு உதவி பெறும் தூய பவுல் மகாஜன மேல்நிலைப் பள்ளி மற்றும் ஸ்ரீ வி.ராமகிருஷ்ணா மேல் நிலைப்பள்ளியில் பயிலும் பதினொன்றாம் வகுப்பு மாணவியருக்கு தமிழக அரசின் விலை இல்லா மிதிவண்டிகளை திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் மாநில மீனவர் அணி துணைத்தலைவருமான கே.பி.சங்கர் வழங்கினார். தலைமை செயற்குழு உறுப்பினர் வி.இராமநாதன் மாமன்ற உறுப்பினர்கள் கே.பி.சொக்கலிங்கம் கவி.கணேசன், பானுமதி சந்தர் மற்றும் பலர் பங்கேற்றனர்.